**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 358 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 9** |
| **Name** | : | **திரு. வீரபத்திரன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது, விருதுநகர் மாவட்டம், M.புதுப்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பேரையூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பாய்வாளராக கடந்த 11.11.2015 ம் தேதி மதியம் சுமார் 13.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பில் இருந்த போது, கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டம், உடுமஞ்சான்சோலை தாலுகா, குண்டுமலை, சூரியநெல்லி எஸ்டேட்டில் குடியிருக்கும் ஸ்டீபன், வயது 47/2015, த/பெ,கருப்பசாமி, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, பேரையூர் காவல்நிலைய குற்ற எண். 170/2015 பிரிவு 365, 394 இதச -வாக வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.12 ஆகும்.** முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரினை இணைத்து பேரையூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

முதல் தகவல் அறிக்கையில் காலம் 15ல் தேதி, நேரம் குறிப்பிடவில்லை. பேரையூர் நீதிமன்றத்திற்கு எப்போது முதல் தகவல் அறிக்கையை அனுப்பி வைத்தேன் என்ற தேதியும், நேரமும் குறிப்பிடவில்லை. பேரையூர் காவல்நிலையத்திற்கும், பேரையூர் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கிமீ தூரம் இருக்கும். பைக் அல்லது பஸ்ஸில் சென்றால் சுமார் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். அசா1க்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். புகாரினை நான் ஏன் எழுதினேன் என்ற காரணத்தினை குறிப்பிடவில்லை. புகார்தாரர் ஏற்கனவே கொடுத்த புகாரினை மறைத்து இந்த வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் மறைத்து ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் அதசாஆ.1 புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மறைக்கப்பட்ட புகாரில் எதிரிக்கும் புகார்தாரருக்கும் சம்பள பாக்கி இருந்தது என்றும், அதனால் அவர்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றும், அதை குறித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதசாஆ.1 புகாரில் உள்ள கையெழுத்துகளும், முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்துக்களும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடைய கையெழுத்துக்கள் என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கையில் புகாரினை பெற்றுக்கொண்டதற்கான கையெழுத்து மட்டும் தான் போட்டேன். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் புகாரினை

வாங்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பின்னிட்டு புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை